# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## AS.No.62/2000

PW–1 பஷ்ருதீன் நாள்.27.10.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

வா.சா.ஆ.55 உத்தரவு எனக்கு சார்வு செய்யப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரிதான். 2000ம் ஆண்டில் எனக்கு அந்த ஆவணம் கிடைத்தது. 1995ம் ஆண்டில் பெரம்பலூர் மாவட்ட பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். 1997ம் ஆண்டு வேப்பந்தட்டை தாலுக்கா உருவானது என்றால் சரிதான். தாவா சொத்து வேப்பந்தட்டை தாலுக்காவில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.55 ஆவணம் எனக்கு எந்த உரிமை மூலத்தை ஏற்படுத்தாது என்றால் சரியல்ல. என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவின் பேரில் வக்புவாரியம் மற்றும் வேறு எவராலும் மேல்முறையீட்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். வட்டாட்சியர் உத்தரவுக்கு பின்னர் கருப்பாயி மீது வக்புவாரியம் அரியலூர் முன்சீப் நீதிமன்றத்தில் அ.வ.எண்.404/1973 தாக்கல் செய்து அதில் தீர்ப்பாணை பெற்றுள்ளார்கள் என்றால் அது செல்லாது. அந்த தீர்ப்பாணையின் பேரில் நிறைவேறுதல் மனு எண்.1062/1980 தாக்கல் செய்து வக்புவாரியம் சொத்தை சுவாதீனம் எடுத்துள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை 2ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ.2 ஆக ஏற்கனவே தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அது செல்லாது. கருப்பாயிக்கு சொத்தில் உரிமையில்லாத போது நான் தாக்கல் செய்துள்ள கிரய பத்திரங்கள் செல்லாது என்றால் சரியல்ல. சொத்தில் உரிமையில்லாத தனிநபர்கள் மீது வழக்கு தாக்கல்செய்து தீர்ப்பாணை பெறவேண்டும் என்பதற்காக வக்புவாரியம் தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ள்ளேன் என்றால் சரியல்ல. தனிநபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துவிட்டு வழக்கை காலம் கடத்துகிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**<u>18, 30 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

1985ம் ஆண்டு கீழமை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். 1974ம் ஆண்டிலேயே தாவா சொத்து வக்புவாரியத்திற்கு பாத்தியப்பட்டது என்று நீதிமன்றத்தில் தீர்ப்பாகி உள்ளது என்றால் அது செல்லாது. வழக்கு தாக்கல் செய்யும் போது வக்புவாரியம் உறுப்பினர்களை நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்யும் போது சேர்த்த பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லைஎன்றால் சரியல்ல. 16.05.1991ம் தேதியில் சொத்துக்களை நிறுவாகம் செய்வதற்கு வக்புவாரியத்தில் கமிட்டி நியமித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. கமிட்டி உறுப்பினர்களை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் தேவையான மற்றும் அவசியமான தரப்பினர்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வக்புவாரியத்திற்கு பாத்தியப்பட்டதால் கமிட்டி உறுப்பினர்கள் இறந்துவிட்டால் அடுத்த கமிட்டி உறுப்பினர்களை சேர்க்கவேண்டுமென்றும் இறந்தவர்களின் வாரிசுகளை சேர்க்கமுடியாது என்றால் சரியல்ல. நான் வாரிசுகளாக சேர்த்துள்ள நபர்களுக்கும் வழக்கு சொத்திற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.55 உத்தரவை வேப்பந்தட்டை வட்டாட்சியர் தான் வழங்கமுடியும் என்றும், அதில் கோபுர முத்திரை இல்லையென்றும் அது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. நான் மேல்முறையீட்டில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.